## ★ "மண்ணுக்கும் மக்களுக்கும் நேர்மையாக இருக்கிறோம்" - யோகி


விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 17 ஐ; அவ்வலி பிறை: 15 இதழ்: 222

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3-12-1990


(யாழ்ப்பாணம்)

"வரலாற்றை நாங்கள் எழுதுகிறோம். வரலாறு எங்களுடன் பயணம் செய்கிறது இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகி யோகரத்தினம் தெரிவித்தார்.

''வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' பாடல் ஒலிப் பதிவு நாடா அறிமுக விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

கவிஞர் புதுவை இரத்தின துரை தலைமையில் யாழ்.

(4ம் பக்கம் பார்க்க)

## மாங்குளம் தாக்குதல் பற்றி லண்டன் ஏடுகள் விமர்சனம்

(லண்டன்)

மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் தாக்கப்பட்டு, முற்றாக அழிக்கப்பட்டது பற்றி லண்டன் தினசரிகள் முக்கிய செய்திகளை வெளியிட்டுள்ளன.

'த பினான்ஸியல் ரைம்ஸ்', 'காரிடியன்', டெயிலி மிரர்' பத்திரிகைகளில் விடுதலைப் புலிகளின் திறமை பற்றிச் செய்திகளும், கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் திரு. கிட்டுவின் பேட்டியை 'கார்டியன்' முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளது. (சி)

## ★ இனப் பிரச்னையை உடனடியாக தீர்க்க

# விடுதலைப் புலிகளுடன் பேச ஜனாதிபதி 'பிரேமா' விருப்பம்!

## சூசகமாக அழைப்பு

(கொழும்பு)

**நாட்டில் மீண்டும் சாதகமானதொரு நிலை தோன்றும் பட்சத்தில் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்கள் நடாத்த ஜனாதிபதி திரு. பிரேமதாசா விருப்பம் கொண்டுள்ளதாக திரு. பிரட்மன் வீரக்கோன் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் இதனைச் சூசகமாகத் தெரிவித்தார்.

திரு. வீரக்கோன் மேலும் தெரிவிக்கையில்: தமிழர் பிரச்சனை, தேசிய நெருக்கடி ஆகியவற்றை உடனடியாகத் தீர்த்துவைப்பதற்கே ஜனாதிபதி விரும்புகிறார். தமிழ், முஸ்லிம் கட்சிகள் இதற்கான நீதியான தீர்வைச் சமர்ப்பித்தால் தாம் அவற்றைத் தீர்த்து வைப்பதாகக் கூறியுள்ளார்.

இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குச் சகல அரசியல் கட்சிகளும், தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகியிருப்பவர்களும்

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தில் இந்திய நிலைப்பாடு!

(லண்டன்)

இந்திய அரசின் இலங்கை தொடர்பான வெளிவிவகாரக் கொள்கை விடுதலைப் புலிகளுக்கு எதிராக அமைந்துவருவதாக நேற்றிரவு பி. பி. ஸி. தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## 600 படையினர் யுத்தத்தில் காலிழப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் கடந்த ஆறு மாதங்களாக இடம்பெறும் யுத்தத்தில் சுமார் 600 க்கும் மேற்பட்ட படையினர் தமது கால்களை இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (4-ம் பக்கம் பார்க்க)

## கால்களை இழந்த இராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

உன்னிச்சை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் வெளியேறிய இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கியதில் மூன்று இராணுவத்தினர் தமது கால்களை இழந்தனர்.

உன்னிச்சை புல்லுமலையை இணைக்கும் முரசு வீதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. (க)

## மனித உரிமைகளை மீறும் மோசமான நாடு ஸ்ரீலங்கா

(லண்டன்)

உலகில் மனித உரிமைகளை ஸ்ரீலங்காவும் மிக மோசமான முறையில் மீறிவருவதாக 'சர்வதேச மன்னிப்பு சபை' பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

1987 முதல் 89 வரையிலான காலப்பகுதியில் தென் பகுதியில் எவ்வாறு சிங்கள மக்கள் காணாமல் போனார்களோ அதேபோல் தற்போது கிழக்கில் தமிழர்கள் காணாமல் போகிறார்கள். பல தமிழர்கள் மோசமாக சித்திரவதைக்குள்ளாகி கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கில் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் தமிழரே நூற்றுக்கணக்கில் கொலை செய்யப்பட்டும், காணாமல் போயுமுள்ளதாகவும் அண்மையில் 'மன்னிப்பு சபை' வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (சி)

## 75,000 பேர் நாடு திரும்பினர்

(பக்தாத்)

குவைத்தில் நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் இலங்கையர்களில் எழுபத்தையாயிரம் பேர் இலங்கை திரும்பியுள்ளதாக இலங்கைக்கான ஈராக்

(4-ம் பக்கம் பார்க்க)

## மண்டூரில் ஒருவர் கொலை நால்வர் கைது

(மட்டக்களப்பு)

மண்டூர் குருமண்துறையில் பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். நால்வர் கைதுசெய்யப்பட்டனர். (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் பற்றி பேச 'சஹாய்' சென்னை வருகிறார்

(புதுடில்லி)

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் குறித்து முதல்வர் திரு. கருணாநிதியுடன் பேச்சுக்கள் நடாத்த இந்திய உள்துறை இணையமைச்சர் திரு. சுபோத் கான் சஹாய் அடுத்தவாரம் சென்னை வருகிறார்.

தமிழகத்தில் புலிகளின் ஆதிக்கம் வியாபித்திருப்பதாக இந்திரா காங்கிரஸும், அ. தி. மு. க. வும், ஜனதாதள் (எஸ்)ஸும் தொடர்ச்சியாக பல குற்றச் சாட்டுகளை முதல்வருக்கு எதிராக சுமத்தி வருகிறது.

இதையடுத்து திரு. சஹாய் முதல்வரை சந்திக்க சென்னை வருகிறார். மேற்படி குற்றச்

(4ம் பக்கம் பார்க்க))

## யாழ். மாநகரசபைக்கு 6 மாதம் வருமானமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபைக்கு கடந்த ஆறுமாதங்களாக மின்சாரம் உட்பட பல்வேறு வருமானங்களும் தடைப்பட்டுள்ளன. இக்கால கட்டத்தில் எவரும் மின்சார பாக்கியையோ ஆதன வரிகளையோ செலுத்தாமையால்

[4-ம் பக்கம் பார்க்க]

## குரும்பசிட்டி மோதலில் 10 இராணுவம் பலி

(காங்கேசன்துறை)

வசாவிளான், கட்டுவன், குரும்பசிட்டி பகுதிகளில் நேற்று அதிகாலை 2மணிநேரமாக கடும்மோதல்கள் இடம்பெற்றன. மோதலின் போது 10 இராணுவத்தினர் பலியானதையடுத்து படைகள் பின்வாங்கி முகாமுக்குத் திரும்பியது.

நேற்று அதிகாலை 5-30மணியளவில் வசாவிளானில் நிலைகொண்டுள்ள இராணுவத்தி

[4-ம் பக்கம் பார்க்க]

## தமிழர் மீள குடியமர இராணுவம் பெரும் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகளாக வெளியேறிய தமிழர்கள், தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியேற சிறிலங்கா இராணுவம் பெரும் தடையாக உள்ளதுடன், பல கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது.

அகதிகள் எவரும் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரின்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) "மண்டேலா ரேடர்" இல: 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; "அரஸ் ஜவுளியகம்" 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-4158)

### சனசமூக நிலையங்களுக்கு

மீரா வெளியீடுகள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். (சி-4156)

## லொறி சாரதி விடுதலை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு யூறியா ஏற்றி வந்த தமிழ் லொறிச்சாரதி வவனியா இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

லொறியில் இருந்த 200 மூடை யூறியாவும் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்ல இராணுவத்தினர் தடை செய்ததுடன் அதனை மீண்டும் கொழும்புக்கு எடுத்துச் செல்லுமாறு பணித்துள்ளார். (ச)

## 300 ரூபா சம்பள உயர்வு

(கொழும்பு)

நாடுமுழுவதும் பணியாற்றும் இருபத்தையாயிரம் ஆசிரியர் பயிலுனர்களுக்கு முன்னூறு ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரையை பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளர் ஏ. அபேயரத்தின அனுப்பிவைத்துள்ளார். இச்சம்பள உயர்வு இம்மாதசம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

அரவம் தீண்டி மன்னார் மாவட்டத்திலுள்ள பிரப்பாங் கண்டல் கிராமத்தில் க.முருகேசு (வயது 62) என்ற வயோபர் பலியாகினார்.

எஞ்சிய

## சுவரும் இடிக்கப்பட்டது

(பேர்லின்)

கிழக்கு மேற்கு ஜேர்மனியை நாற்பது ஆண்டுகளாக பிரித்து வைத்திருந்த பேர்லின் கடைசிச்சுவரையும் ஜேர்மன் மக்கள் இடித்துத்தள்ளியுள்ளனர். கடந்த வாரம் மிஞ்சியடுத்தே இருபது கிலோமைல் சுவர் இடித்துத்தள்ளப்பட்டுள்ளது. (ச)

# கல்விக்கொள்கைகளைமாற்ற தேசியஆணைக்குழு ஆரம்பம்

(கொழும்புத்துறை)

நாட்டில் கல்விக்கொள்கைகளை மாற்றம் செய்வதற்காக தேசிய கல்வி ஆணைக்குழு விரைவில் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கொழும்பு றோயல் கல்லூரியில் பரிசளிப்பு விழாவில் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் புதிய கல்விக்கொள்கையில் நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்றவகையில் தொழில் கல்வி கட்டாயமாக்கப்படுமென தெரிவித்தார். (ச)

## தென்னிந்திய திருச்சபை

# இருநூறு குழந்தைகளுக்கு பால்மா வழங்கியது

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையினர் வட்டுக்கோட்டையிலுள்ள திருச்சபைக் காரியாலயத்தில் வைத்து 199, 1990ம் ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளுக்கு லக்டோஜன், லக்ஸ்பிறே மாப் பக்கற்றுகளை இலவசமாக வழங்கிவருகின்றனர்.

அராலி, வட்டுக்கோட்டை, மூளாய், சித்தன்கேணி, சுழிபுரம், சங்கானை முதலான பல இடங்களிலுள்ளவர்கள் தினமும் இங்கு வந்து மாப்பைக்கற்றுக்களைப் பெற்றுச் செல்கின்றனர்.

தினமும் சுமார் 200 குழந்தைகளுக்கு இந்த மாப் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (139)

## இராசி பலன்

**3-12-1990**
**திங்கட்கிழமை**

பிரதமை ந. ப. 12-11வரை மிருகசீரிடம் பி. இ. 1-12 வரை, அமிர்த சித்தயோகம். கரிநாள், இராகுகாலம் காலை 7-42 முதல் 7-15 வரை, நல்ல நேரம் 12-15 முதல் 1-45 வரை.

மேடம்- காரிய தாமதம், அடுத்தவர் உதவி, குடும்பப் பகை, அலைச்சல் மிகுதி, கடன் படல்.

இடபம்-நன்நம்பிக்கை, காரிய பலிதம், குடும்ப பலிதம், குடும்ப அமைதி, தொழில்முன்னேற்றம்.

மிதுனம்-குடும்பச் சிக்கல், அவப்பெயர், தொழில்குறைவு தாய்வழி நினைவு, பணக் குறைவு.

கடகம்-தொழில் லாபம், குடும்பத்தில் சந்தோசம், நண்பருதவி, விருந்துபசாரம்.

சிங்கம்-கடிதஉறவு, தொழில் போட்டி, கருத்துமோதல், பயனற்ற செயல்.

கன்னி-தடுமாற்றம், அந்நியருதவி, குடும்ப வேதனை, அலைச்சல்மிகுதி, செலவு.

துலாம்-காரிய பலிதம், பயணங்களால் நன்மை, புதிய உறவு, தொழில் பலிதம், புகழ்.

விருச்சிகம்-எதிர்பாராத சந்திப்பு, தொழில் முயற்சி, பரோபகாரம், குடும்பத்தில் சுபகாரியம்.

தனுசு-வைத்தியச் செலவு, அந்திய வாசம், வீண்பழி, குடும்பப் பிரிவு, அலைச்சல்.

மகரம்-புதிய சிந்தனை. பொதுத்துறை பாராட்டு. குடும்ப உல்லாசம், ஆலய தரிசனம், மனநிறைவு.

கும்பம்-தொழில் சிறப்பு, குடும்பத்தில் கருத்துமோதல், இனசனப் பகை, துயரமான செய்தி.

மீனம்- வேண்டியவை கிட்டல், தொழில் பாதிப்பு, பெரியோர் ஆசி, காரியத்தடை, பணவரவு.

ஜோஸ்யர்.

## கண்டெடுத்த பொருட்கள்

(பூநகரி)

கோண்டாவிலைச் சேர்ந்த கதிர்கமராசா விஜயராசன் என்பவரின் 'பாக்' ஒன்று கண்டெடுக்கப்பட்டு பூநகரி விடுதலை புலிகளின் நிதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை உரியவர் வந்து பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவையாளர் யோகேந்திரா என்பவரின் பார்சல் கண்டெடுத்து பூநகரி விடுதலைப் புலிகளின் நிதி செயகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## விவசாயபீடம் இன்று விரிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி விவசாயபீடத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம்விரிவுரைகள் நடைபெறவிருக்கிறது.

விவசாய பீடத்திற்கு 26 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களென்பது குறிப்பிடத்தக்கது. (153)

## டிசம்பர் 31-ற்கு முன்

# வருடாந்த கூட்டத்தை நடத்துமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜம் தமது பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள் அனைத்தும் தங்கள் நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தை மார்கழி மாதம் 31ந் திகதிக்கு முன்னர் நடாத்த வேண்டும் என்று கேட்டுள்ளது.

இச்சமாஜத்தின் நிர்வாக சபைக் கூட்டம் சமாஜத்தலைவர் திரு. வ. செகராஜசிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது இப்பிரிவிலுள்ள சகல சனசமூக நிலையங்களும் எதிர்வரும் 1991-ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளை தெரிவுசெய்வதற்காக இவ்வருடம் மார்கழி மாதம் 31ம் திகதிக்கு முன்னர் தங்கள் நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடாத்தி முடிக்கவேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

1999ம் ஆண்டில் நடைபெற்ற தமது நிலைய நிர்வாக சபை, பொதுச்சபை, வருடாந்த பொதுச்சபைக் கூட்டங்களின் அறிக்கைகளின் பிரதிகளை பிரதேச சபைக்கு ஒவ்வொரு சனசமூக நிலையமும் அனுப்பிவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (73)

## கூட்டுறவுதந்தை நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத்தந்தையாகவும் கல்வி சமயத்துறைகளில் முன்னோடியாகவும் அருந்தொண்டு புரிந்த பெரியார் வீரசிங்கம் அமரராகி 26-வது ஆண்டு பூர்த்தியையொட்டி டிசெம்பர் மாதம் 5-ந் திகதி காலை 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நினைவுதினம் கூட்டம் நடைபெறவிருக்கிறது. (153)

## குமரபுரத்தில்

# விமானத்தாக்குதல் நால்வர் காயம்

(கிளிநொச்சி)

குமரபுரத்தில் கடந்த 30-ம் திகதி மாலை 2 மணியளவில் கந்தசாமி கோவிலடியில் இடம் பெற்ற பொம்மர் தாக்குதலில் செல்லப்பா அருள்நாதன் (49 வயது) அருள்நாதன் புவனேஸ்வரி (மனைவி) 37 வயது, அருள்நாதன், அருணா (மகன்) (16 வயது) காயமடைந்தனர். இவர்களின் வீடு பலத்த சேதத்தை தழுவியது. இரு விமானங்கள் இத்தாக்குதலை நடத்தியது.

### ஹெலித் தாக்குதல்

குறிப்பிடப்பட்ட தினத்தில் காலை 9 மணிக்கு முரசுமோட்டை செல்லையா கடையடியில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார். இவர் தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### ஷெல் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து தினமும் பரந்தன், கிளிநொச்சி, உமையாள்புரம் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் இடம்பெற்று வருவதும் விமானத்தாக்குதல் உக்கிரமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (83)

## வீதி புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்குச்செல்லும் வீதி 90 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. (72)

## ஓய்வுபெற்றார்

(பண்டத்தரிப்பு)

மாதகல் சென். ஜோசவ் மகாவித்தியாலய அதிபர் ச. ச. அருள் சுப்பிரமணியம் இம்மாதம் தொடக்கம் பதவியிலிருந்து ஒய்வுபெற்றார். (72)

## குரு வித்தியாலய இறுதிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் நடைபெறவுள்ள குரு வித்தியாலய இறுதிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அவசரமாக அனுப்புவதற்காக இரண்டாம் வருட பயிலுநர்கள் யாவரும் உடனடியாகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## அகதிகளுக்கு புதிய மண்டபம்

[ஏழாலை]

அதிகரித்துவரும் அகதிகளின் உண்டி, உறையுள் போன்ற மற்றும் வசதியை கருதி தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலய சூழலில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தேவஸ்தானத் தலைவர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைத்தார். இம்மண்டபம் ஐயாயிரம் ரூபா செலவில்கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 800க்கும் அதிகமான அகதிகள் இம்மண்டபத்தில் தங்கியுள்ளனர்.

## புதிய சங்கம்

(சித்தன்கேணி)

விசேடசேவை அலுவலர்கள். பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களாக இருந்து கிராமசேவை அலுவலர்களாக பதவிமாற்றம் செய்யப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து 'தமிழ்பேசும் கிராம சேவை அலுவலர்கள் சங்கம்' என்ற புதிய சங்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

## முத்திரைகள் வந்துசேர்ந்தன

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு பல மாத இடைவெளிக்குப் பின்பு முத்திரைகள் வான்கடிதங்கள் ஆகியன வந்துசேர்ந்துள்ளன. (72)

## வீதி திருத்தம்

(பூநகரி)

பூநகரி சங்குப்பிட்டி வீதி, பூநகரி பரந்தன் வீதி, மன்னார் வீதி என்பவற்றை பூநகரி பள்ளமடு பிரதேசப் பொறுப்பாளர் திரு. கு. சாம் பொதுமக்களின் உதவியுடன் சிரமதானம் மூலம் செப்பனிட்டு வருகின்றார்.

## 28 பேருக்கு எயிட்ஸ்நோய்

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை 28 பேருக்கு எயிட்ஸ் நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 7 பேர் வெளிநாட்டவர்கள் என எயிட்ஸ் தடுப்பு பிரசார இயக்கத்தினர் அறிவித்துள்ளனர். (ச)

## மீன் விலையில் சரிவு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பொதுச் சந்தையில் தற்போது மீனின் விலை குறைந்துள்ளது.

இதனால் இச்சந்தையில் மீன் வாங்குவோர் தொகை அதி அதிகரித்துள்ளது.

இச்சந்தைக் கட்டிடம் மிகச் சிறிதாக இருப்பதால் மீன்விற்போரும் வாங்குவோரும் மூச்சுவிடமுடியாத அளவுக்கு நெருக்கமாக நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுவருகின்றது. (139)

## வருடாந்த மகாநாடு

(கொழும்பு)

இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் வருடாந்த மாநாடு இன்று முதல் ஏழாம் திகதிவரை பண்டாரநாயக்கா சர்வதேசமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உ
சிவமயம்

## 20ஆவது ஆண்டு நினைவஞ்சலி!

அமரர் சிவஸ்ரீ மு. சிவகடாக்ஷக்குருக்கள்

இன்று (3-12-1990) அயரதுதியை

காசிய கோத்திர திலகராய் காசி ஐங்கரனின் அடியவனாய் பாலர் ஞானோதய சபையின் தலைவராய் பல்லாண்டு காலம்காலம் பணிபுரிந்து பல நூற்றுக்கணக் நல்லறிஞர்களை உருவாக்கியஞானக்கொழுந்தே தங்கள் நினைவு என்றும் எம்மனதைவிட்டு என்றும் அகலமாட்டாது.

என்றும் உமது பணியைத் தொடரும்

பாலர் ஞானோதய சபையினர்
காசி விநாயகர் தேவஸ்தானம்
வீணாக்கடவை
தெல்லிப்பழை.

(சி-4160)

## 'விஷக்கிருமி' திட்டங்கள்

உயிரைக் குடிக்கும் விஷக்கிருமிகள் எங்கிருந்தோ வந்து உடலில் புகுந்து பரவிப் பெருகிய பின்னர் அவை குறித்து அறிந்தோ தெரிந்தோ பயன் ஏதுமில்லை.

இத்தகைய விஷக்கிருமிகளை திட்டமிட்டு பரவ விட்டு தமிழினத்தையே அழித்தொழிக்கும் அசுரத் தொழிலில், ஆட்சிக்கு மாறிமாறிவரும் அரசுகள் நீண்டகாலமாகவே ஈடுபட்டு வருகின்றன.

கடந்த ஜூன் 11-ம் திகதி முதல் விடுதலைப் புலிகளுக்கும் அரசபடையினருக்குமிடையே மூண்டயுத்தத்தையடுத்து திருமலை மாவட்டத்தின் அரச திணைக்களங்களில் உருவாகியுள்ள [உருவாக்கப்பட்ட] காலி இடங்களுக்கு உள்ளூர் வாசிகள் என்றபோர்வையில், அரசுக்கு 'வாசி' யான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலை வழங்கும் திட்டம் விரைவில் அரங்கேறவுள்ளது.

அரச கரும மொழித் திணிப்பு; திட்டமிட்ட குடியேற்றம், தரப்படுத்தல், மாதிரிக்கிராமம், அகதிகள் புனர்வாழ்வு என்ற உருமாறி கருவழிக்கும் பல்வேறு விஷக்கிருமித் திட்டங்களின் தொடர்ச்சியாக இதனையும் அந்தர அவசரமாக அமுல்செய்ய அரசு புதிய தந்திரத்தை கையாளவுள்ளது.

1958-ம் ஆண்டுமுதல் இன்றுவரையில் கிழக்கு மாகாணத்தில் அதிலும் திருமலை மாவட்டம் சந்தித்த பல இனக்கலவரங்களிலும் நிகழ்ந்த தேடுதல் வேட்டைகளின் போதும், படித்த தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டும், மர்மமான முறையில் மறைந்தும், எஞ்சியோர், நம் சொந்த மண்ணையே விட்டு வெளியேறி வடக்கிலும் தமிழ்நாட்டிலும் அகதிகளாக தஞ்சமடைந்து உள்ளனர்.

தென்மராட்சியிலுள்ள கல்வயல் அகதிகள் முகாமில் மட்டும் நூற்றுக் கணக்கான திருமலை இளைஞர்கள் அகதிகளாக வந்து தஞ்சம் புகுந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

படித்த தமிழ் இளைஞர்கள் எவரும் அற்று வெறிச்சோடிக் கிடக்கும் திருமலை மாவட்டத்தில், 'உள்ளூர் வாசிகள்' என்ற போர்வையில் மாற்றுக் குடியினர்க்கு வேலை வாய்ப்பளித்து, திருமலை அரச நிர்வாக அமைப்பை சிங்கள மயமாக்க வழிகோலப்பட்டுள்ளது.

இராணுவ தீர்வினையே அடம்பிடித்து, தடம்புரண்டு நிற்கும் அரசு, குறுக்கு வழிகளில் இன ஒழிப்பு கொள்கைகளை அமுல் செய்வதை விடுத்து தமிழினத்தின் நீண்டகால அடிப்படைப் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும்வரை இத்தகைய மூடுமந்திர, தந்திர திட்டங்களைத் தவிர்த்துக் கொள்வது எல்லோருக்கும் நல்லது!

— மயூரன்

## அகதிகளுக்கு சாப்பாட்டுப் பார்சல்

(நவாலி)

நவாலி முருகானந்தா மாதர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தினர் நவாலியில் தங்கியுள்ள அகதிகளுக்கு ஒவ்வொரு வாரமும் நூறு சாப்பாட்டுப் பார்சல்களை அன்பளிப்புச் செய்து வருகின்றனர்.

வலி. வடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நவாலியிலுள்ள சென். பீற்றேஸ் பாடசாலை, அரசடி மகாவித்தியாலயம், அட்டகிரி தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் அகதிகளாகத் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (71)

## டென்மார்க் கிரிக்கெட் சங்க தலைவராக தமிழர் தெரிவு



[யாழ்ப்பாணம்]

டென்மார்க்கில் அறுபது ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

டென்மார்க்கில் உள்ள 'கோல்பிக்' நகரில் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட கிரிக்கெட் சங்கத்துக்குப் புதிய தலைவராகச் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. மைக்கல் இராஜேந்திரம் என்பவரே ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்கும்போது கிரிக்கெட் போட்டிகளில் சிறந்த வீரராகப் பிரபல்யம் பெற்றிருந்தார். இவரின் மனைவி ஜொய் கிறேஸ் ஹெலன், மட்டுநகர் சென். சிசிலியா கல்லூரியில் விளையாட்டுப் போட்டிகளில் பல சாதனைகளை ஏற்படுத்தியவர்.

யாழ்ப்பாணத்திலுள் விளையாட்டுச் சங்கங்கள் பலவற்றில் முக்கிய பதவிகளைத் தற்போது வகித்துவரும் காப்டன் டி. ஏ. எம். குணசிங்கத்தின், மருமகன் திரு. மைக்கல் இராஜேந்திரம் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## 3 மாத சுற்றுப் பயணத்தில்
# பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது

(புதுடில்லி)

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையிலான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இம் மாதக்கடைசிப் பகுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

மேற்படி இருநாடுகளுக்குமிடையில் கடந்த வருடம் நடைபெறவிருந்த டெஸ்ட் போட்டிகள் காஷ்மீர் பிரச்னையால் கைவிடப்பட்டது.

இம்முறை இந்தியாவரும் பாகிஸ்தான் கோஷ்டி ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும், ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும் மூன்று மூன்று நாள் போட்டிகளிலும் கலந்து கொள்ளவுள்ளது.

மூன்று மாத சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இந்தியாவரும் பாகிஸ்தான் கோஷ்டிக்கு இம்ரான்கானும் இந்தியக் கோஷ்டிக்கு அஸாருதீனும் தலைமைதாங்குகின்றனர்.

இம்முறை இப்போட்டிக்கு இரு கோஷ்டிகளுக்குமிடையில் பலத்த பலப்பரீட்சையாக இருக்கக்கூடுமென, கிரிக்கெட் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (வி)

## மத்திய கிழக்குப் பிரச்சனை:
# அமெரிக்கா பேச்சு நடாத்த விருப்பம் தெரிவித்துள்ளது

(லண்டன்)

மத்திய கிழக்கு நெருக்கடிக்குத் தீர்வொன்றைத் தோற்றுவிப்பதற்காக அமெரிக்கா பேச்சுவார்த்தை நடாத்த விருப்பம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஈராக் தனது விருப்பத்தை அறிவித்துள்ளது. கடந்த நான்கு மாதங்களாக பெரும் யுத்தமொன்றுக்கு வழிசமைத்திருந்த மத்திய கிழக்கு நெருக்கடி புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருப்பதை ஐ. நா. செயலாளர் பெரஸ்டிக்கோயா வரவேற்றுள்ளார்.

அமெரிக்காவின் புதிய யோசனை ஈராக்கிற்கு சலுகை வழங்குவதற்காக வழங்கப்படவில்லையென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் அறிவித்துள்ளார். புதிய யோசனை குறித்து ஈராக் அமைச்சரவையில் ஆராயப்பட்டுவருகின்றது. (ச)

## வவுனியா, மன்னார் பகுதியில்
# க. பொ. த. (சா) பரீட்சை நடாத்த ஏற்பாடு

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையை நடாத்தச் சகல ஏற்பாடுகளையும் பிராந்திய கல்விப்பணிமனைகள் செய்துள்ளன.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பிரவேச அட்டைகடந்தவெள்ளி பிராந்தியப் பணிமனைகளில் வைத்துப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுமாவட்ட மாணவர்களுக்கு இதுவரைபிரவேச அட்டைகள் வழங்கப் படவில்லை. (ச)

## யாழ். மருத்துவபீட மாணவர் பரீட்சை கொழும்பில் நடைபெறும்

[கொழும்பு]

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்களுக்கான பரீட்சைகள் கொழும்பில் நடைபெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் தங்கியிருக்கும் மாணவர்களின் கோரிக்கையினை அடுத்து இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ச)

## பூநகரி
# விமானத் தாக்குதலில் காயமடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப்பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற கடும் விமானத்தாக்குதல்களில் ஒன்பதுபேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு; மரியதாஸ் (51), சிவலிங்கம் (40), இராசேந்திரம் (31), தங்கராசா (34), ரவிச்சந்திரன் (22), சே. நந்தகுமார் (52), அனுரா (21) இராசேந்திரன் (19), அமிர்தலிங்கம் (32).

இச்சம்பவத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ச. ரவி (28) வயது, யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஈஸ்வரநாதன் விக்கினராசா (24 வயது) ஆகியோர் பலியானார்கள். (153)

## 400 ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி மூலம் தங்கள் மாதாந்த ஓய்வூதியத்தை பெற்று வந்த சுமார் 400 ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் தொடக்கம் ஓய்வூதியப்பணம் கிடைக்கவில்லை.

ஓய்வூதியப்பணத்தைகாசோலையாக கிராமிய வங்கி வழங்க முன்வந்தபோதிலும் பெரும்பாலானோர் அதை பெற முற்படவில்லை.

காசோலைகளை பெற்ற சிலரும் இன்னும் அவற்றை மாற்றமுடியாது திண்டாடுகின்றனர்.

இதுபற்றி பண்டத்தரிப்பு ஓய்வூதியம் பெறுவோர் கூட்டுறவுச் சங்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் மூலம் முறையிட்டும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## சோவியத்தில் உணவு விநியோகத்தில் நெருக்கடி

(மாஸ்கோ)

சோவியத்யூனியனில் உணவு விநியோகத்தில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளதால் உணவுப்பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையைப் போக்க ஜேர்மனி பெருந்தொகையான மாமிச உணவை உடனடியாக விமான மூலம் அனுப்பிவைக்க ஏற்பாடு செய்துள்ளது. ஐக்கிய ஜேர்மனி உருவாக சோவியத் ஜனாதிபதி கொப்பசேவ் பெரு முயற்சி செய்தமையால் இவ்வுதவியை தாம் செய்வதாக ஜேர்மனியின் அதிபர் கெல்மட்ஹோல் அறிவித்துள்ளார். சோவியத் ஜனாதிபதியின் சீர்திருத்த கொள்கைகளை ஆதரிக்காத சிலர் அரசியல் லாபம் கருதி உணவு விநியோகத்தை சீர்குலைத்தும் கறுப்புச்சந்தையை தோற்றுவித்துவருவதாயும் கொர்பசேவ் ஆதரவாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ச)

## தவறணை மீது குண்டு வீச்சு
# வயோதிபர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் நேற்று முன்தினம் 3 போர் விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சில் தவறணை ஒன்று முற்றாக சேதமடைந்தது. இங்கு முதியவர் ஒருவர் பலியானார். நான்குபேர் படுகாயமடைந்தனர். தாக்குதலில் இராமநாதபுரத்தை சேர்ந்த சண்முகம் (65 வயது) பலியானார். தியாகராசா, கணபதிப்பிள்ளை பரமநாதன், விஜயரட்ணம் காயமடைந்தனர்.

பூநகரியில் கடந்த வியாழன் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சில் 10 லொறிகளும் ஒரு 'எல்வ்' வானும் முற்றாக சேதமுற்றன. 14 லொறிகள் சிறு சேதமுற்றன.

இத்தாக்குதலின் போது பல பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (சி)

## சங்கானை வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தினமும் பெருந்தொகையான நோயாளர்கள் இங்கு சிகிச்சை பெற வருவதால் கையிருப்பில் இருக்கும் மருந்து வகைகளும் முடிவடையும் தறுவாயில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சங்கானை பகுதியிலுள்ள பாடசாலைகள், தேவாலயங்கள், சங்கானை நீதிமன்றம், சங்கானை கலாசார மண்டபம் ஆகிய இடங்களிலும், தனியார் வீடுகளிலும் தங்கியுள்ள இடம்பெயர்ந்து வந்த அகதிகளான மக்களும் சிகிச்சை பெறுவதற்காக இந்த வைத்தியசாலையையே நாடிவருகின்றதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. (72)

## வயாவிளான் ம. வி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் இன்று திங்கட்கிழமை வயாவிளான் மத்திய மகாவித்தியாலம் ஆரம்பமாகும். (ரி)

# பாடசாலையில் இராணுவ முகாம்
# பரீட்சை எழுத மாணவர் தயக்கம்

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம் முகாமிட்டிருக்கும் இரு பாடசாலைகளில் மட்டும் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் வவனியா மாவட்டத்திலுள்ள மாணவர்கள் இன்று ஆரம்பமாகும் இப் பரீட்சை எழுதமுடியாதிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நகருக்கு வெளியில் ஊரடங்கு அமுலிலுள்ளதால், அங்கு யாரிடம் அனுமதி பெற்று, ஊரடங்கு நேரத்தில் பரீட்சை எழுத அனுமதி பெறுவதென்பது பற்றியும் வவனியா மாவட்ட மாணவர்கள் செய்வதறியாத நிலையில் உள்ளனர். (ச)

## வாகன விபத்தில் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தியில், நேற்றுக் காலை 7 மணியளவில் நடைபெற்ற வாகன விபத்தில் கந்தசாமி (வயது 65) என்பவர் அதே இடத்தில் பலியானார். (வி)

### தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதியின்றிக் குடியமர அனுமதி வழங்கப்படமாட்டாது.

அகதிகள், பாதுகாப்புப் படையினரின் அனுமதியின்றி குடியமரக்கூடாது என சிறிலங்கா இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ச)

### மண்ணுக்கும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்துக்கல்லூரியில் நேற்று நடைபெற்ற இவ் விழாவில் திரு. யோகி மேலும் பேசுகையில்; எமது மண்ணுக்கும் மக்களுக்கும் நேர்மையாக இருக்கிறோம் மிகப்பெரியளவிலான ஒழுக்கத்தை கடைப்பிடித்து வருகிறோம்: எமது இலட்சியத்தில் விசுவாசமாக இருக்கிறோம்.

''உலகத்திலே அதியுயர்ந்த நவீன கருவிகளை எங்கள் கைகளிலே வைத்திருக்கிறோம்:

''தர்மம், தார்மீகம், மனிதாபிமானம் பற்றிப் பேசும் உலகம் எங்களைக் கொல்வதற்கு சிறிலங்கா அரசிற்கு உதவி வருகிறது;''

''நீண்டகால அடிமை மோகம் எம்மை பாதித்துள்ளது. இதிலிருந்து வெளியே வந்து மக்கள் எமது போராட்டத்தில் இணைய வேண்டும்''

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு.கோ. மகேந்திரராசா (மாத்தயா) பேசுகையில் கூறியதாவது; ''உண்மையான கலை இலக்கியம் எமது மக்களை வழிநடத்தும் என்பதற்கு இன்றைய எமது கலாசார படைப்புகள் முன்னோடியாக விளங்குகின்றன.''

''இன்றைய சமுதாயம் யதார்த்தத்தை பாடும்பாடல்களை உணர்ந்துள்ளது; இதனால் மக்களிடம் விடுதலை உணர்வு ஏற்பட்டுவருகிறது.''

''உண்மையான தியாகத்தைப் போற்றும் தன்மை சமுதாயத்தில் ஏற்பட்டுள்ளது: இது எமது மக்களின் வளர்ச்சிப்போக்கை எடுத்துக்காட்டுகிறது''.

யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.ராஜன், மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் மாலினி உட்பட பலர் இவ்விழாவில் உரையாற்றினார்கள்.

பாடல் பதிவில் பங்கு பற்றிய கலைஞர்களை யாழ். மாவட்ட இராணுவ பொறுப்பாளர் திரு. பானு பரிசு வழங்கி கௌரவித்தார். (153)

## 2,5000 வைத்தியர்களுக்கு நாடு முழுதும் பற்றுக்குறை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் 2500 வைத்தியர்களுக்கு பற்றுக்குறை நிலவுவதாக வைத்திய சேவைச்சங்கம் அறிவித்துள்ளது.

இவ்வெற்றிடங்களை நிரப்ப போதனா வைத்தியசாலை சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக பெருமளவு டாக்டர்கள்வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதே காரணமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## 2,00 ஆங்கில ஆசிரியர் ஜனவரியில் நியமனம்

(கொழும்பு)

அடுத்தாண்டு ஜனவரியில் நாடுமுழுவதிலும் இரண்டாயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க கல்விச்சேவை ஆணைக்குழு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இந்நியமனம் கடந்தாண்டு யூலைமாதம் நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளில் ஆயிரம் பேருக்கும் செப்டம்பர் மாதம் நடைபெற்ற போட்டிப்பரீட்சையின் பிரகாரம் ஆயிரம் பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச)

### இனப் பிரச்னையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும். நாட்டில் மீண்டும் அமைதி ஏற்படத் தேவையான சகல முயற்சிகளையும் ஜனாதிபதி மேற்கொள்ளத் தயாராக உள்ளதாகவும் அவர் கூறினர். (ச-கி)

### புலிகள் பற்றி

1-ம் பக்கத் தொடர்ச்சி]

சாட்டுக்களை மறுத்துவரும் திரு. கருணாநிதி தமது ஆட்சியைக் கலைக்க எடுக்கப்படும் சதி நடவடிக்கை இது என்று கண்டித்துள்ளார். (சி)

## மிளகாய்த்திருடன் அகப்பட்டான்

(கொக்குவில்)

கொக்குவில் ஆடியபாதம் சந்தியில் நேற்று யாழ்ரன் ஸ்ரோர்சில் விற்பனைக்குவைத்திருந்த சுமார் 50 கிலோ கொண்ட செத்தல் மிளகாய்ச் சாக்குடன் 17 வயது மதிக்கத்தக்க திருடன் ஒருவன் கையும் மெய்யுமாக பிடிபட்டான்.

இவனை தீவிர விசாரணை செய்தபோது இது போல் திருநெல்வேலி சந்தைப்பகுதியில் உள்ள கடைகளிலும் திருடியதாகவும் அறிய முடிந்தது. பல இடங்களில் பணமும் திருடியதாகக் கூறினான். பின்னர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டான். (135)

### யாழ். மாநகர

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எந்தவருமானமும் கிடைக்கவில்லையென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளையில் மின்சார வருமானம் இல்லாவிட்டாலும் களவாக மின்சாரம் பெறுபவர்களால் ஏற்படும் நஷ்டம் மாதாமாதம் ஐந்து லட்சருபா தற்போது இல்லையென அவ்அதிகாரி தெரிவித்தார். (ச)

### மண்டூரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டூர்-களுவாஞ்சிக்குடிக்குமிடையில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுந்தரம் பிரபாகரன் (வயது 25) சுட்டுக் கொல்லப்பட்டார்: குசிரித்தம்பி ராசப்பா படுகாயமடைந்தார். முத்துவேல் கனகலிங்கம் (வயது22), தங்கராசா ஆகியோரை இராணுவம் கைதுசெய்து முகாமுக்குக் கொண்டு சென்றது.

கைது செய்யப்படுபவர்கள் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்ற போதிலும், இவர்களுக்கு என்ன நடக்கிறதெனத் தெரியவில்லை. கைதான பலர் தொடர்ந்தும் காணமற்போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (வி)

## 33 பேர் பலி 20 பேர் காயம்

(புதுடில்லி)

தனியாருக்குச் சொந்தமான பஸ் ஒன்று லொறி ஒன்றுடன் நேற்று முற்பகல் மோதிக்கொண்டதில் 33 பேர் ஸ்தலத்திலேயெ பலியானார்கள். 20 பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தோர் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனராயினும் இவர்களது நிலைமை கவலைக்கிடமாகவே இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தரப் பிரதேச மாநிலத்திலேயே இப்பரிதாப சம்பவம் இடம் பெற்றுள்ளது. (க)

## வி. பி. சிங் மீது போபாலில் கல் வீச்சு

(புதுடில்லி)

இந்திய முன்னாள் பிரதமர் திரு. வி.பி.சிங் மீதும், ஜனதாதள் கட்சித்தலைவர் திரு. எஸ். ஆர். பொம்மை மீதும் நேற்று போபாலில் பலத்த கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

எனினும் தலைவர்கள் இருவரும் சாதுரியமாக கல்வீச்சிலிருந்து தப்பிக் கொண்டனர். இவர்களது ஆதரவாளர்களும் பொலிசாரும் பலத்த காயமடைந்தனர். அயோத்தி பிரச்னைக்காகவே கல்வீச்சு நடைபெற்றதாம்.

இந்தக் கல்வீச்சை ஆட்சேபித்து திரு. வி.பி. சிங் உத்தரபிரதேஷ் முதலமைச்சர் வீட்டின் முன்னால் பலமணி நேரம் இருந்து தமது கண்டனத்தை தெரிவித்துக்கொண்டார். (சி)

## டெங்கு காய்ச்சல் பரவுகிறது

(கொக்குவில்)

திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் ஒரு வித டெங்கு காய்ச்சல் பரவிவருகின்றமையினால் அரசினர் வைத்தியசாலைகளிலும், தனியார் மருத்துவ மனைகளிலும் நோயாளர் தொகை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (135)

### 600 படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கால்களை இழந்தவர்களுக்கு நேற்று கொழும்பில் வைத்து 200 சோடி ஜெய்பூர் செயற்கை கால்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் படைத்தளபதிகளும், முக்கிய அமைச்சர்களும் கலந்து கொண்டனர். ஏனைய படையினருக்கான செயற்கை கால்கள் அடுத்த சில வாரத்தில் வழங்கப்படவுள்ளதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (சி)

### குரும்பசிட்டி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர் அயற்பகுதிகளை நோக்கி முன்னேற முயன்றனர்: ஷெல்களை அடுத்தடுத்து ஏவிவிட்டு சரமாரியாக வேட்டுக்களையும் தீர்த்தபடி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

இரண்டு மணி நேரமாக இடம்பெற்ற கடும் மோதலையடுத்து 10 இராணுவம் பலியானதால் இழப்புகளுடன் பின்வாங்கியது.

இச்சமயம் கட்டுவனில் நிலைகொண்டுள்ள இராணுவமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி வெளியேவர முயன்றபோது புலிகள் எதிர்த்து தாக்கியதையடுத்து பின்வாங்கிச் சென்றது.

மோதல் ஓய்ந்ததையடுத்து பலாலி விமான நிலையத்திற்கு அவசரமாக வந்திறங்கிய அவ்ரோ விமானம் ஒன்று காயமடைந்த இராணுவத்தினரை உடனடியாக எடுத்துச் சென்றிருக்கலாம் என கூறப்படுகிறது. (வி-86)

## பணயக் கைதிகளை மீட்டமுகமது அலி

(வாஷிங்டன்)

முன்னாள் உலக குத்துச் சண்டை வீரர் முகமதுஅலி ஈராக்கில் பணயம் வைக்கப்பட்டிருந்தவர்களில் 25 அமெரிக்கர்களை தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார்.

அமெரிக்காவின் சார்பில் ஈராக் சென்ற முகமதுஅலி ஈராக்கிய ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடாத்தி தமது முயற்சியில் வெற்றி பெற்றுர்.

எனினும் நூற்றுக்கணக்கான அமெரிக்கர்கள் ஈராக்கில் தொடர்ந்தும் பணயக் கைதிகளாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### 75,000 பேர்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கிய தூதர் அறிவித்துள்ளார்.

முப்பதினாயிரம் பேர் எது வித கஷ்டமுமின்றி அங்கேயே தொழில் புரிவதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்தாயிரம் பேர் குவைத்திலிருந்து வெளியேறி அரபு நாடுகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

### இலங்கை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழகத்தில் புலிகளின் நடமாட்டம் குறித்தும், முதல்வர் திரு. கருணாநிதியுடன் மத்திய அரசு கொண்டுள்ள முரண்பாடும், செயற்பாடுகளும் இதனைக் காட்டுவதாகவும் கூறியது.

இதேவேளை மாங்குளம் முகாமைத் தாக்கி புலிகள் கொண்ட வெற்றியினால் இலங்கையில் தற்போது யுத்தம் முடிவடையும் சாத்தியம் குறைந்துள்ளதாகவும் நேற்று முன்தினம் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

## மரண அறிவித்தல்

### தம்பு குமாரசுவாமி

நல்லூரைச் சேர்ந்த தம்பு குமாரசுவாமி காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக்கணவரும், கெங்காதரன் (யாழ். இந்துக்கல்லூரி), வேதநாயகி (விற்பனைத் திணைக்களம்), செந்தில் மனோகரன், சுரேந்திரன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புத்தந்தையும், கோபாலசிங்கம், கணேஷலிங்கம் ஆகியோரின் சகோதரரும், பவளராணி, சோதிலிங்கம் (காலஞ்சென்றவர்) ஆகியோரின் மாமனாரும், தர்ஷிதா, முகுந்தன், சங்கீதா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (3-12-90) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் 4, சங்கிலியன் வீதி, நல்லூரிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: கு. கெங்காதரன்

(சி 4164)

## ஒயில் திருடர்களை பொதுமக்கள் பிடித்தனர்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலைச் சந்தியில் அமைந்துள்ள பாரிய மின்மாற்றியிலிருந்து பெருமளவு ஒயில் கையாடமுயன்ற 7நபர்கள் பொதுமக்களின் முயற்சியுடன் பிடிக்கப்பட்டு மேல் விசாரணைக்காக விடுதலைப் புலிகள் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11-00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இக் கையாடல் நடவடிக்கைக்குப் பாவிக்கப்பட்ட ரயர் பொருத்தப்பட்ட ஒற்றைத்திருக்கல் வண்டியும், ஒயில் நிரப்பப்பட்ட கான்களும் கைப்பற்றப்பட்டன.

மூன்று மைல் தூரத்திற்குத் துரத்தப்பட்டு மூன்று நபர்கள் பிடிக்கப்பட்டனர். நள்ளிரவையும் பொருட்படுத்தாது இக்கள்வரை பிடிக்கும் முயற்சியில் பொதுமக்கள் ஈடுபட்டனர். இம் மின்மாற்றியில் இருந்தே காரைநகர் முழுவதிற்கும் மின்சாரம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.